4. அறிவிப்பு.

ஆளுநர் இசைவு—நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவு 1980.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்வு செய்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. அரசினர் சட்ட முன் வடிவு நிதி ஒதுக்க (எண். 2) சட்ட முன்வடிவு 1980

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண்.2) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

66. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வீரியம் நீக்கப் பெற்ற சாராவி, மெதில் ஆல்கஹால், வார்னீஸ் (பிரெஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தமொனறு செய்வது குறித்து உள் துறையின் (P.&E.-IV) 14—1—1980 ஆம் தேதியிடப் பெற்ற 109 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.